# தமிழ் நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்

(மாநில அரசு பல்கலைக்கழக சட்டம் எண்43/1997 நிறுவப்பட்டது)

**சீர்மிகு சட்டப் பள்ளி**

"பெருங்குடி வளாகம்" எம்.ஜி. ஆர். சாலை, சென்னை – 600 113

தொலைபேசி – 044–22439051



முனைவர். வே. பாலாஜி, எம்.எல். பி.எச்.டி., எண்.2417/சீசப/இப/எஸ்1/2026

புலமுதன்மையர் 08.07.2026

## சுற்றறிக்கை

பொருள்: தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப்பல்கலைக்கழகம் – சீர்மிகு சட்டப்பள்ளி – 2026–2027 கல்வியாண்டிற்கான முத்தமிழ்ப் பேரவை பொதுக்குழு மற்றும் நிர்வாகக் குழுவை மறுசீரமைக்க விண்ணப்பித்தல் – தொடர்பாக.

பார்வை: திருமதி, என், உமாமகேஷ்வரி, உதவி பேராசிரியர், உறுப்பினர், முத்தமிழ்ப் பேரவை, சீர்மிகு சட்டப்பள்ளி, தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப்பல்கலைக்கழகம் அவர்களிடமிருந்து பெறப்பட்ட கடிதம் நாள். 03.07.2026.

........

பார்வையில் கண்ட கடிதத்தின்படி, சீர்மிகு சட்டப்பள்ளியில் செயல்பட்டு வரும் முத்தமிழ்ப் பேரவையின் பொதுக்குழு மற்றும் நிர்வாகக் குழு மறுசீரமைக்கப்படவுள்ளது. எனவே, விருப்பமுள்ள மாணவ, மாணவியர்கள் இச்சுற்றறிக்கையில் இணைக்கப்பட்டுள்ள வழிமுறைகளை அறிந்து கொண்டு 15.07.2026–குள் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

புலமுதல்வர்

இணைப்பு: மேலே உள்ளவாறு.

பெறுநர் :

அனைத்து மாணவர்கள், இளங்கலை மற்றும் முதுகலை சட்டப்படிப்புகள், சீர்மிகு சட்டப் பள்ளி, தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், சென்னை – 600 113.

நகல் :

1. மாண்புமிகு துணைவேந்தர் அவர்களின் செயலர் மூலம் கனிவான பார்வைக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2. பதிவாளர், தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், சென்னை
3. இயக்குநர், முதுகலை சட்டப்படிப்புகள், தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், சென்னை
4. தலைவர், முத்தமிழ்ப் பேரவை, சீர்மிகு சட்டப்பள்ளி, தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப்பல்கலைக்கழகம், சென்னை
5. நூலகர், தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், சென்னை
6. அனைத்து இயக்குநர், இளங்கலை சட்டப்படிப்புகள், தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், சென்னை
7. வளாக சொத்தலுவலர், பெருங்குடி வளாகம், தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், சென்னை
8. மேற்பார்வையாளர், பெருங்குடி வளாகம், தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், சென்னை

The Tamil Nadu Dr.Ambedkar Law University
தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்
State University Established by Act No.43 of 1997
NAAC Accredited

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்
சீர்மிகு சட்டப் பள்ளி (School of Excellence in Law)
பெருங்குடி வளாகம், சென்னை – 600 113

2417
3/7/26

## "முத்தமிழ்ப் பேரவை"

**பொருள்:** *"முத்தமிழ்ப் பேரவை" அமைத்தல் – கல்வியாண்டு 2026-2027 – தொடர்பாக.*

இந்த சுற்றறிக்கையின் மூலம் அறிவிக்கப்படுவது என்னவெனில், தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் சீர்மிகு சட்டப் பள்ளியில் 2026 – 2027 கல்வியாண்டில் உருவாக்கப்பட்ட **"முத்தமிழ்ப் பேரவை"** புதுபிக்கப்படவுள்ளது.

**<u>நோக்கங்கள்</u>**

1. சீர்மிகு சட்டப் பள்ளியில், சட்டத் தமிழை ஊக்குவிக்கும் வகையிலும், முத்தமிழின் மூன்று கூறுகளையும் சட்ட மாணவர்கள் மத்தியில் பரவச் செய்து, படைப்பாற்றலை ஊக்குவித்தல்.
2. பேச்சு, கவிதை, கட்டுரை, விவாதம் முதலிய போட்டிகள் மூலம் மாணவர்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தும் வாய்ப்பை ஏற்படுத்துதல்.
3. கருத்தரங்குகள், பயிலரங்குகள், சொற்பொழிவுகள், உரையாடல்கள் மூலம் மாணவர்களின் கல்வி மற்றும் பண்பாட்டு திறன்களை மேம்படுத்துதல்.
4. பிற கல்வி நிறுவனங்கள், கழகங்கள் மற்றும் பண்பாட்டு அமைப்புகளுடன் இணைந்து செயல்திறனை மேம்படுத்துதல்.

22/6/26

3/7/26
(N.Umamaheswari)
ஆசிரிய ஒருங்கிணைப்பாளர்.



# முத்தமிழ்ப் பேரவை

## செயற்குழு அமைப்பு (2026 – 2027)

| பதவி | தகுதி (Eligibility) |
|---|---|
| தலைவர் | ஐந்து வருட சட்டப்படிப்பு – 5ஆம் ஆண்டு / மூன்று வருட சட்டப்படிப்பு – 3ஆம் ஆண்டு |
| துணைத் தலைவர் | ஐந்து வருட சட்டப்படிப்பு – 4ஆம் ஆண்டு / மூன்று வருட சட்டப்படிப்பு – 2ஆம் ஆண்டு |
| செயலாளர் | ஐந்து வருட சட்டப்படிப்பு – 5ஆம் ஆண்டு / மூன்று வருட சட்டப்படிப்பு – 3ஆம் ஆண்டு |
| துணைச் செயலாளர் | ஐந்து வருட சட்டப்படிப்பு – 4ஆம் ஆண்டு / மூன்று வருட சட்டப்படிப்பு – 2ஆம் ஆண்டு |
| பொருளாளர் | ஐந்து வருட சட்டப்படிப்பு – 5ஆம் ஆண்டு / மூன்று வருட சட்டப்படிப்பு – 3ஆம் ஆண்டு |
| துணைப் பொருளாளர் | ஐந்து வருட சட்டப்படிப்பு – 4ஆம் ஆண்டு / மூன்று வருட சட்டப்படிப்பு – 2ஆம் ஆண்டு |
| இலக்கியத் துறை தலைவர் | ஐந்து வருட சட்டப்படிப்பு – 5ஆம் ஆண்டு / மூன்று வருட சட்டப்படிப்பு – 3ஆம் ஆண்டு |

| | |
|---|---|
| இலக்கியத் துறை துணை தலைவர் | ஐந்து வருட சட்டப்படிப்பு – 4ஆம் ஆண்டு / மூன்று வருட சட்டப்படிப்பு – 2ஆம் ஆண்டு |
| மேலாண்மைத் துறை தலைவர் | ஐந்து வருட சட்டப்படிப்பு – 5ஆம் ஆண்டு / மூன்று வருட சட்டப்படிப்பு – 3ஆம் ஆண்டு |
| மேலாண்மைத் துறை துணை தலைவர் | ஐந்து வருட சட்டப்படிப்பு – 4ஆம் ஆண்டு / மூன்று வருட சட்டப்படிப்பு – 2ஆம் ஆண்டு |
| ஊடகத் துறை தலைவர் | ஐந்து வருட சட்டப்படிப்பு – 5ஆம் ஆண்டு / மூன்று வருட சட்டப்படிப்பு – 3ஆம் ஆண்டு |
| ஊடகத் துறை துணை தலைவர் | ஐந்து வருட சட்டப்படிப்பு – 4ஆம் ஆண்டு / மூன்று வருட சட்டப்படிப்பு – 2ஆம் ஆண்டு |
| ஆராய்ச்சி மற்றும் வெளியீட்டுக்குழு தலைவர் | ஐந்து வருட சட்டப்படிப்பு – 5ஆம் ஆண்டு / மூன்று வருட சட்டப்படிப்பு – 3ஆம் ஆண்டு |
| ஆராய்ச்சி மற்றும் வெளியீட்டுக்குழு துணை தலைவர் | ஐந்து வருட சட்டப்படிப்பு – 4ஆம் ஆண்டு / மூன்று வருட சட்டப்படிப்பு – 2ஆம் ஆண்டு |

| | |
|---|---|
| கலை மற்றும் பண்பாட்டு துறை தலைவர் | ஐந்து வருட சட்டப்படிப்பு – 5ஆம் ஆண்டு / மூன்று வருட சட்டப்படிப்பு – 3ஆம் ஆண்டு |
| கலை மற்றும் பண்பாட்டு துறை துணை தலைவர் | ஐந்து வருட சட்டப்படிப்பு – 4ஆம் ஆண்டு / மூன்று வருட சட்டப்படிப்பு – 2ஆம் ஆண்டு |
| ஆண்டு பிரதிநிதி | அனைத்து ஆண்டு மாணவர்கள் (ஒவ்வொரு ஆண்டிலிருந்தும் இரு மாணவர் தேர்ந்தெடுக்கப்படுவர்) |
| உறுப்பினர்கள் | அனைத்து ஆண்டு மாணவர்கள் |
| புகைப்படக் கலைஞர் | அனைத்து ஆண்டு மாணவர்கள் |

இப்பேரவை ஆசிரியர் ஒருங்கிணைப்பாளர்களின் வழிகாட்டுதலின் படி செயல்படும். இந்த முத்தமிழ்ப் பேரவையில் தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்கள் சட்டத் தமிழ் சார்ந்த நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வதிலும், மாணவர்களிடையே தமிழ் பயன்பாட்டை ஊக்குவிப்பதிலும் கடமையாக கொண்டு செயல்பட வேண்டும்.

## முத்தமிழ்ப் பேரவை உறுப்பினர் சேர்க்கை விதிகள்

முத்தமிழ்ப் பேரவையில் இணைய விரும்பும் மாணவர்களுக்கான தகுதி வரம்புகள் மற்றும் சேர்க்கை நடைமுறைகள்:

1. தமிழ் மொழி, இலக்கியம் மற்றும் பண்பாடு ஆகியவற்றில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருத்தல்.
2. இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழின் ஏதேனும் ஒரு துறையில் தனித்திறமையோ அல்லது செயல்பாட்டு அனுபவமோ பெற்றிருக்க வேண்டும்.
3. தமிழிலக்கியத் தொடர்பான போட்டிகளில் பங்கேற்ற அல்லது வெற்றி பெற்றதற்கான சான்றிதழ்கள் வைத்திருப்பவர்களுக்கு சேர்க்கையில் முன்னுரிமை வழங்கப்படும்.
4. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாணவர்களின் தகுதிகள் சமமாக இருக்கும் பட்சத்தில், அவர்கள் பங்கேற்ற போட்டிகளின் தரம் மற்றும் நிலை ஆராயப்பட்டு இறுதித் தேர்வு செய்யப்படும்.
5. ஊடகத் துறைக்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் ஊடகத் துறை சார்ந்த தங்கள் படைப்புகளை (Canva designs, brochure design samples, photographs and etc.) ‘சான்றிதழ்கள்’ கோப்பில் இணைத்து அனுப்பவும்

**சேர்க்கை நடைமுறை**

**உறுப்பினர் சேர்க்கை பின்வரும் இரண்டு நிலைகளில் நடைபெறும்:**

• நிலை 1 – கூகுள் படிவம் (Google Form)

கல்வியாண்டின் தொடக்கத்தில் வெளியிடப்படும் கூகுள் படிவத்தின் வழியாக மாணவர்கள் விண்ணப்பிக்க வேண்டும். இதில் தங்களின் அடிப்படை விவரங்கள் மற்றும் பங்கேற்ற நிகழ்வுகளின் விவரங்களை பதிவிட வேண்டும்.

• நிலை 2 – நேர்காணல் (Interview)

முதற்கட்ட விண்ணப்பங்களின் அடிப்படையில் தகுதியான மாணவர்களின் தரம் சமமாக இருப்பின் அவர்கள் நேர்காணலுக்கு அழைக்கப்படுவர், நேர்காணலின் போது மாணவர்களின் ஆளுமைத் திறன், தமிழறிவு மற்றும் முத்தமிழ் சார்ந்த ஏதேனும் ஒரு துறையில் உள்ள நேரடி திறமை (Performance) ஆராயப்பட்டு தேர்ந்தெடுக்கப்படுவர்.

• தேர்வு முறைகள்

தேர்வு முறைகள் முற்றிலும் திறமையின் அடிப்படையிலும் பாகுபாடற்ற முறையிலும் நடைபெறும்.



**The Tamil Nadu Dr. Ambedkar Law University**
**தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கைலக்கழகம்**

# முத்தமிழ்ப் பேரவை

- நிர்வாக அதிகாரம்

உறுப்பினர்களைச் சேர்த்தல், நீக்குதல் மற்றும் விதிமுறைகளில் மாற்றங்கள் செய்தல் ஆகியவற்றில் புல முதன்மையர் (Dean, SOEL) அவர்களின் முடிவே இறுதியானது.

**பதிவு செய்ய கடைசி நாள்: 15/07/2026 மாலை 5:00.**

**கீழ்கண்ட இணைப்பில் பதிவு செய்யவும்:**

**https://forms.gle/UEGRJEpqsFzE1Ah38**